தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

புதன்கிழமை, 1975 அக்டோபர் 29.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Police Training College, Vellore.

*106 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister with reference to Question No. 451, answered on 16-3-1974 be pleased to state the present stage of the proposal to shift the Police Training College from Vellore?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரியை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான செயற்குறிப்பை அரசு ஆய்வு செய்து, அச்செயற்குறிப்பை தற்காலிகமாக ஒத்திப்போட வேண்டுமென முடிவு செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, ஆரம்ப காலந்தொட்டு வேலூரில் இந்தப் போலீஸ் ட்ரெயினிங் காலேஜ் இருந்து வருகிறது. கட்டடம் மட்டுந்தான் பழையதாக இருக்கிறது. திருட்டுக் குற்றங்களை இன்வெஸ்டிகேட் செய்வதில் ஸ்காட்லாண்டு யார்டில் கையாளுவதைப் போன்று கையாளும் முறைகளைக் கற்பிக்கும் வகையில் ஒரு போலீஸ் ட்ரெயினிங் காலேஜ் அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா? 'தெப்ட்' குற்றங்களைக் கண்டுபிடிக்க ஸ்பெஷல் ட்ரெயினிங் வேண்டும் என்று சொல்லப்படுவதால் அந்த அடிப்படையில் சென்னைக்கு அருகில் கட்டப் போகும் போலீஸ் ட்ரெயினிங் காலேஜில் அம்மாதிரி அமைப்பை ஏற்படுத்த சர்க்கார் உத்தேசிக்குமா?

[1975 அக்டோபர் 29

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே அவர்களுக்கு உறுப்பினர் சொன்ன பயிற்சிகள் அனைத்தும் தரப்படுகின்றன. அவற்றை நவீன முறைகளில் ஆக்குவதற்கேற்ற முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தற்காலிகமாக அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடார்க்காடு மாவட்டத்தில்—வேலூரில் பல ஆண்டுகளாக அப்படிப்பட்ட பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நாய்களுக்குப் பயிற்சி கொடுக்கும் நிலையமும் வேண்டும் என்று பல அதிகாரிகள் வற்புறுத்துகிறார்கள். வேலூரில் உள்ள போலீஸ் பயிற்சிக் கல்லூரியை அங்கிருந்து மாற்றாமல் நிரந்தரமாக அங்கேயே அதை நீடிக்கச் செய்வதோடு, எல்லாவித பயிற்சிகளையும் அங்கு அளித்து, நாய்களுக்கும் பயிற்சி தரக்கூடிய பிரிவையும் அங்கேயே உருவாக்குவதற்கு நம்முடைய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நமக்கு போலீஸ் பயிற்சி நல்ல முறையில் இருக்க வேண்டுமா இல்லையா என்பது தான் பிரச்சனை. அது வேலூரில்தான் இருக்க வேண்டுமா என்பது அடுத்த கட்டம். வேலூரில் இருக்கிற வசதிக் குறைவு காரணமாகத்தான் அலமாதியில் இந்தக் காவலர் பயிற்சிக் கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அந்த முடிவு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதே தவிர வேறு அல்ல. நிதி நிலை காரணமாக ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. அலமாதியில் அணி வகுப்புக்கான திடல், விளையாட்டுத் திடல் பரந்த அளவில் அங்கே இருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல், போலீசாருக்கு நீச்சல் குளம் போன்றவை அங்கே இருக்கின்றன. பெரிய கட்டடங்கள் அலமாதியில் இருக்கின்றன. இந்திய அரசு பாதுகாப்புத் துறை நிறுவனங்கள் பல அங்கே இருக்கின்றன. அதோடு, பயிற்சி நிலையம் இருப்பது பொருத்தமாக இருக்கும்; வசதியாக இருக்கும். வேறு மாநிலங்களிலிருந்து வருகிற இராணுவ அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், வேறு நாடுகளிலிருந்து வருகிற காவல் துறை அதிகாரிகள், நிபுணர்கள் சென்னைக்கு அருகாமையில் 20 மைல் தொலைவில் இருக்கும் அலமாதிக்கு

1975 அக்டோபர் 29]

சென்று வருவதற்கும், பயிற்சி அளிப்பதற்கும் சுலபமாக இருக்கும் என்பதற்காக இதை அலமாதியில் மாற்ற அரசு உத்தேசித்திருக்கிறது.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, அலமாதியில் பல்வேறு வசதிகள் இருப்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், எனக்குக் கிடைத்த தகவலின்படி, அலமாதியில் இனிமேல் நிலம் வாங்கி செய்யப்போவதாகச் சொல்கிறார்கள். எது எப்படியிருந்தாலும், இந்தப் பயிற்சிப் பள்ளியை விஸ்தரிப்பதற்கேற்ற நிலம், இட வசதி, வேலூரிலும் அதை அடுத்த வெளிப்புறத்திலும் இருக்கிறது. 300, 400 ஏக்கரா நிலம் என்னுடைய தொகுதியில் தர நான் தயாராக இருக்கிறேன். வடார்க்காடு மாவட்டத்திலேயே அந்த நிலையத்தை வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வேலூரில் நிறைய வசதி இருக்கலாம். திரு. துரைமுருகனும் வசதி செய்து கொடுக்கலாம். ஆனால், வேலூர் சென்னைக்கு எண்பது மைல் தூரத்தில் இருக்கிறது. அலமாதி 20 மைல் தூரத்தில் இருக்கிறது. அதை துரைமுருகன் முயன்றால்கூட மாற்ற முடியாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: வேலூரில் இருக்கும் காவலர் பயிற்சி நிலையத்தை அங்கேயே வைத்துவிட்டு, அலமாதியில் புதிதாக ஒன்று துவக்கலாமே, இதை அரசாங்கம் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது பயிற்சிக் கல்லூரியாக இருப்பதால் வேலூரில் ஒன்றும், அலமாதியில் ஒன்றும் துவக்க முடியாது. அதை மாற்றி அலமாதியில் துவக்கலாம் என்று உத்தேசித்திருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வேலூரில் இந்தப் பயிற்சிக் கல்லூரி பல்லாண்டுக் காலமாக இருக்கிறது. ஆகவே, இப்பொழுது வேலூரில் உள்ள பழைய கட்டடத்தை புதுப்பித்தும், அதையொட்டிய இடங்களில் புதிய கட்டடங்களைக் கட்டியும் ஏற்கெனவே மற்ற இடங்களில் கொடுத்திருக்கக்கூடிய வசதிகளை உடனடியாக அங்கு செய்ய முடியுமா?

[1975 அக்டோபர் 29

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது வேலூரில் இருக்கும் கட்டடங்களைப் புதுப்பிப்பதைவிட அலமாதியில் இருக்கும் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதுதான் நல்லது என்று அரசு உணர்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றுவதற்கு இயலாது.

அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர் விடுதி

*107 வினா—**திரு. வை. பாலசுந்தரம்**: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு விடுதி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: செங்கற்பட்டு மாவட்டத்தில் அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்கள் விடுதி ஒன்று அமைக்க அரசு 9—6—1975 அன்று உத்தரவு பிறப்பித்து, 20—8—1975 முதல் அது செயல்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கு அரசு, அரிசன நலத் துறையின் மூலம் மூன்றரை இலட்ச ரூபாய் செலவில் அரிசன மாணவர் விடுதி ஒன்று கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளது. அதில் ஏறத்தாழ 200 மாணவர்கள் தங்கிப் பயில வசதி இருக்கிறது. அதிலேயே பின்தங்கிய மாணவர்களும் கணிசமான எண்ணிக்கையில் தங்கிப் பயில வசதி இருக்கிறது. ஆகவே, விடுதி இல்லாத எலப்பாக்கம், உலத்தி போன்ற பகுதிகளில் பின்தங்கியோர் மாணவர் விடுதியை அமைக்க அரசு உதவி புரியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே அச்சிறுபாக்கத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கான விடுதி அமைப்பது என்று அரசு ஆணையிட்டு செயல்படுத்தப்பட்டுவிட்ட காரணத்தால் அதை மாற்ற முடியாது. உலத்தி, எலப்பாக்கம் போன்ற இடங்களில் தேவைப்பட்டால் பின்தங்கிய மாணவர் விடுதி வேறு அமைப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கலாம்.